





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 2019

We Are Here..!! To Guide You..!!






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 20.10.2019

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- நியமனங்கள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்










# தேசிய நிகழ்வுகள்

- இந்தியா – அமெரிக்கா **பாதுகாப்புத் தொழில் நுட்பங்கள் மற்றும் வர்த்தகக் குழுவின் 9-வது கூட்டம் தில்லியில்** நடைபெற உள்ளது.
  - பாதுகாப்புத் தளவாடங்களையும் நவீன தொழில் நுட்பங்களையும் அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து அதிக அளவில் பெறும் அங்கீகாரம் (எஸ்டிஏ – 1) இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்கியுள்ளது.
  - "நேட்டோ" கூட்டணி நாடுகளுக்கு இணையான அங்கீகாரம் இந்தியாவிற்கும் கடந்த ஆண்டு வழங்கியுள்ளது.

- **பதப்படுத்தப்பட்ட பாலில் 38% தரமற்றவை** என இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் நடத்திய **ஆய்வில் தகவல்.**
  - இந்த ஆய்வறிக்கையை உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய தலைமை செயல் அதிகாரி பவன் அகர்வால் வெளியிட்டார்.
  - பதப்படுத்தப்பட்ட பாலில் பாக்டீரியா வளர்ச்சியை தடுக்கும் ஆஃப்லாடாக்ஸின் - எம் 1 என்ற வேதிப்பொருள் இருப்பது தெரிய வந்துள்ளது.

# நியமனங்கள்

- **தேசிய பாதுகாப்பு படையின் தலைமை இயக்குநராக** மூத்த ஐபிஎஸ் அதிகாரி **அனுப் குமார்** நியமனம்.
  - கருப்பு பூனை படை என்றழைக்கப்படும் என்எஸ்ஜி பயங்கரவாதிகளுக்கு எதிரான பதிலடி நடவடிக்கையில் ஈடுபடவும், விமான கடத்தல் சம்பவங்களை தடுக்கவும் கடந்த 1984-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
  - பிரதமர் மோடி தலைமையிலான, நியமனங்களுக்கான அமைச்சரவை குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
  - முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியிலும்

இப்படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **சுல்தான் ஜோஹர் கோப்பை இறுதிப் போட்டியில்** பிரிட்டனிடம் தோற்று **பட்டத்தை இழந்தது இந்திய அணி.**
  - பட்டத்தை வென்ற பிரிட்டன் அணிக்கு தங்கப் பதக்கமும், இந்திய அணிக்கு வெள்ளிப்பதக்கமும் வழங்கபட்டது.
  - மலேசிய அணி 3-ம் இடம் பிடித்து வெண்கல பதக்கம் வென்றது.

## முக்கிய தினங்கள்

- **அக்டோபர் 20 – உலக புள்ளியியல் தினம்**
  - ஐக்கிய நாடுகள் சபை அக்டோபர் 20-ம் தேதியை கடந்த 2010-ம் ஆண்டு உலக புள்ளியியல் தினமாக அறிவித்தது.
  - ஏழை, எளிய மக்களுக்காக அரசால் வரையறுக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் புள்ளி விவரங்களை சார்ந்தே உள்ளன.

We Shine Academy™